சுற்றுச்சூழல் – வனத்துறை

# சுற்றுச்சூழல்

## மானியக் கோரிக்கை எண். 15

# அறிவிப்புகள்
# 2018–2019


## K.C. கருப்பணன்

சுற்றுச்சூழல் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2018

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
## 2018–19 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்
## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

1. 32 மாவட்டங்களில் தேசிய பசுமைப்படை, சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் செலவில் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

சூழல் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணரும் வண்ணம், தேசிய பசுமைப்படை, சூழல் மன்ற மாணவர்களுக்கு வினாடி வினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்கு கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் நடத்தப்படும். மேற்கூறிய மூன்று இனங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவ மற்றும் மாணவியருக்கு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாவட்டத்திற்கு தலா ரூ.2 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.64.00 இலட்சம் செலவில் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் தனித்தனியாக வழங்கப்படுவதுடன் சூழல் சுற்றுலாவும் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

## 2. மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 2 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களில் பிளாஸ்டிக்கின் தீமைகள் குறித்து வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

மனித சமுதாயத்திற்கும் சூழல் அமைப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானதாகும். 2013–14 ஆம் ஆண்டு முதல் 2016–17 வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகளைக் கொண்டு நாட்டுப்பாடல், நாடகம், தெருநாடகம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய நடனம் மூலமாக, வாகனங்கள் மூலமாக பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு குறித்து மேற்கொண்ட விழிப்புணர்வுப் பிரச்சாரம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பிளாஸ்டிக்

பயன்பாட்டின் தீமைகள் குறித்து மாணவர்களும், பொது மக்களும் புரிந்துணர்வை பெறும் வகையில், மாவட்டங்களில் **20** இடங்களில், வாகனங்கள் மூலமாக கலைக்குழுக்களின் பங்களிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்டத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் செலவில், **32** மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.**64** இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**3. அனைத்து 32 மாவட்டங்களிலும், தேர்வு செய்யப்பட்ட 960 பள்ளிகளின் தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்களின் மாணவர்களின் பங்களிப்புடன், பள்ளிக்கு ரூ.15,000/– செலவீட்டில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல்.**

பள்ளி வளாகங்களை தூய்மையானதாகவும், பசுமையானதாகவும் பராமரிக்கவும், சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் மாணவர்களின் பங்களிப்பினை பயனுள்ளதாக்கவும், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 30 பள்ளிகள் வீதம், தேர்ந்தெடுக்கப்பட்ட 960 சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை அமைந்துள்ள பள்ளி வளாகங்களில், மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க, 2017–18 ஆம் ஆண்டில் பள்ளி ஒன்றுக்கு ரூ. 15000/– வீதம், ரூ. 144.00 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மாணவர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழலை பற்றி புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயல் திட்டங்கள் உருவாக்க உதவிகரமாக இருக்கும். இத்திட்டத்தில் தங்களை

இணைத்துக் கொண்டு செயல்படும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கப்படும். **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** இத்திட்டம் 2018–19 ஆம் ஆண்டிலும் 32 மாவட்டங்களில், ரூ.144.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**4. மத்திய அரசின் ஆலோசனைப்படி கடலோர மண்டல சூழல் அமைப்புகள் மற்றும் கடலோர மண்டலத்தில் உள்ள இயற்கை சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் குறித்த விபரங்கள் மற்றும் கடலோர மண்டலத்தில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்த தகவல்களை விளம்பரப்படுத்துதல்.**

கடற்கரைப் பகுதிகளில், மாசு தடுப்பு மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது: சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், சொற்றொடர்கள், விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள், செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்ற தகவல்களை உள்ளடக்கிய 100 தகவல் பலகைகள், ஒவ்வொரு பகுதியிலும் மூன்று முதல் நான்கு வரை 12 அடிக்கு 6 அடி என்ற அளவுகளில் அமைக்கப்படும். ஒரு தகவல் பலகை அமைக்க ரூ.50,000/– என்ற மதிப்பீட்டில் ரூ.50 இலட்சம் செலவில் 100 தகவல் பலகைகள் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் மொத்தம் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**5. கடலோர குடியிருப்புப் பகுதிகளில் தெரு நாடகங்கள், பிரச்சாரம் மூலமாக திடக்கழிவு மேலாண்மை குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.**

கடற்கரைப் பகுதியில் வாழும் மீனவர் சமுதாய மற்றும் உள்ளூர் மக்கள், சூழல் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து குறைந்த விழிப்புணர்வு பெற்றவர்களாக உள்ளனர். மேலும் சில இடங்களில், பாரம்பரிய நோக்கில் செய்யும் நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு இல்லாமையினால், சுற்றுச்சூழலில் பாதிப்புகள் ஏற்படுகிறது. திடக்கழிவுகள், உருளைப்பட்டைகளை எரித்தல், நீராதாரங்கள், கழிமுகங்கள் மற்றும் ஆறுகளின் முகத்துவாரங்களில் மீன் கழிவுகளைக் கொட்டுதல், அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

எனவே **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மாணவர்கள் / அரசு சாரா அமைப்புகள் மூலம் தெருமுனைப் பிரச்சாரங்கள், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் வாயிலாக, மீனவர் பகுதிகளில் மட்டுமல்லாது பொதுமக்கள் மற்றும்

மாணவர்கள் மத்தியில் மேற்கண்ட பல்வேறு செயல்பாடுகளால் ஏற்படும் தீமைகள் குறித்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் ஒரு மாவட்டத்தில் **5** நிகழ்ச்சிகள் வீதம், ஒரு நிகழ்ச்சி ரூ.**60,000** செலவில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் ஒரு மாவட்டத்திற்கு ரூ.**3.00** இலட்சம் வீதம் **13** கடற்கரை மாவட்டங்களில் மொத்தம் ரூ.**39.00** இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த விளம்பரத்திற்கான குறும்படங்களுக்கு விருதுகள் வழங்குதல்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து நிலம், காற்று, நீர், வனம், தொழிற்சாலை நடவடிக்கைகள், தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட ஏதாவது ஒரு தலைப்பில், பொது ஊடகங்களில் விளம்பரப்படுத்த ஏதுவாக சிறந்த விளம்பரப்படங்களுக்கான போட்டிகள் நடத்தி, சிறந்த முதல் மூன்று படங்கள் தேர்வு செய்யப்பட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பரிசுத் தொகையாக முறையே ரூ.7.00 இலட்சம், ரூ.6.00 இலட்சம் மற்றும் ரூ.5.00 இலட்சம் வழங்கப்படும். மேலும் இப்போட்டி தொடர்பான விளம்பரம், மதிப்பீடு செய்தல் மற்றும் பரிசு வழங்கும் விழாவிற்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுவதால் பரிசளிப்பதற்காக மொத்தம் ரூ.20.00 இலட்சம் செலவிடப்படும். விளம்பரப்படத்தின் நகல்கள் சுற்றுச்சூழல் துறையின் வலைதளத்தில் வெளியிடப்படுவதோடு, தேசிய பசுமைப் படை மற்றும் சூழல் மன்றங்களின் விழாக்கள், பள்ளிகளின் பிரார்த்தனை வேளைகளிலும் ஒளிபரப்பப்படுவதோடு, தேர்வு செய்யப்பட்ட விளம்பரப்படங்கள் 2019–20 ஆம் ஆண்டில், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையால் பரிந்துரை செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் ரூ.30 இலட்சம் செலவில் பொது / வெகுஜன ஊடகங்களில் ஒளிபரப்பப்படும்.

**7. சென்னை வருவாய் மாவட்டத்தின் எல்லையை விரிவுபடுத்தியதன் அடிப்படையில் சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக புதிய மாவட்ட அலுவலகங்கள் ரூ.130 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.**

சென்னை மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தின் கண்காணிப்பில் 2333 தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது சென்னை மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்கு ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மட்டும் உள்ளது. அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணை எண்:01 நாள்.04.01.2018–ல் சென்னை வருவாய் மாவட்ட எல்லையை விரிவுபடுத்தி ஆணை வெளியிட்டுள்ளது. தற்போது புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 6 வட்டங்களையும் சேர்த்து மொத்தம் 5117 தொழிற்சாலைகள் இவ்வலுவலகக் கண்காணிப்பின் கீழ் வருகின்றன. இதனால் ஏற்படும் வேலைப்பளுவினைக் கருத்தில் கொண்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சென்னை மாவட்டத்திற்கு மேலும் இரண்டு புதிய சுற்றுச்சூழல் பொறியாளர் மாவட்ட அலுவலகங்கள் 2018–19ஆம் நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ.130 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**8. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாக செயல்படுவதற்காக இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தென் சென்னை பகுதிக்கென ஒரு புதிய மண்டல அலுவலகம் ரூ.90 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.**

இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் தற்போது உள்ள சென்னை மண்டல அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஆறு மாவட்ட அலுவலகங்களும் மற்றும் மூன்று ஆய்வகங்களும் இயங்கி வருகின்றன. மேற்படி மண்டல அலுவலகத்தின் கீழ் 45 அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் அனைத்தையும் இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் மாதந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் இம்மாவட்டங்களில் பொதுமக்கள் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் பிரச்சனைகள் எழும்போது இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பணிச்சுமை அதிகமாவதுடன் குறித்த நேரத்தில் ஆய்வினை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. தற்போது சென்னை வருவாய் மாவட்ட எல்லை விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக சென்னை

மாவட்டத்திற்கு மேலும் இரண்டு புதிய மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக தற்போது உள்ள இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்(கண்காணிப்பு) அவர்களின் பணிச்சுமை மேலும் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டும், தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கவும், பொதுமக்களின் புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 2018–19ஆம் நிதி ஆண்டில் சென்னை–தெற்கு பகுதிக்கு என இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு அவரது தலைமையில் ஒரு புதிய மண்டல அலுவலகம் வாரிய நிதியிலிருந்து ரூ.90 இலட்சம் செலவில் உரிய பதவிகளுடன் ஏற்படுத்தப்படும்.

## 9. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு பசுமை விருதுகள் ரூ. 5 இலட்சம் செலவில் வழங்குதல்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது பொருட்களின் தேவையை குறைத்தல், மறு உபயோகம் செய்தல் மற்றும் மறு சுழற்சி செய்தல் என்ற வகையில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் துவங்குகின்றது. அந்த வகையில் வீட்டில் உண்டாகும் திடக்கழிவிலிருந்து மக்கும் கழிவு, மக்காத கழிவு என தரம் பிரித்து, மக்கும் கழிவிலிருந்து உரம் அல்லது மீத்தேன் எரிவாயு தயாரித்தல், மக்காத கழிவுகளை மறு சுழற்சி செய்வதற்கு அனுப்புதல், வீடுகளில் மழை நீர் சேகரிப்பு வசதி ஏற்படுத்துதல், மரம் நடுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றில் குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். இவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தற்போது மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் பசுமை விருதுகள் போன்று **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன்,**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018-2019** ஆம் நிதி ஆண்டிலிருந்து வாரிய நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில், பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் மூன்று சிறந்த குடியிருப்போர் நலச்சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும்.

## 10. 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.80 லட்சம் செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்குதல்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி பள்ளி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியம் ஆகின்றது. குறிப்பாக திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மின்னணு கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம், பூமி வெப்பமயமாதல் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி பள்ளி மாணவர்களிடம் விளக்குவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தலாம். எனவே **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 2018–19 ஆம் நிதி ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் **6** அரசு மேல்நிலை பள்ளிகள் வீதம் மொத்தம் **200** அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு வாரிய நிதியிலிருந்து ரூ.**80** இலட்சம் செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்கப்படும். இதன்மூலம் பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மின்னணு கழிவு மேலாண்மை மற்றும் இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்கள் காட்சிப்படுத்தப்படும்.

## 11. இரண்டு புதிய மாவட்ட அலுவலகக் கட்டடம் சுமார் ரூ.4 கோடி செலவில் கட்டுதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வாரிய தலைமை அலுவலகம், 5 மண்டல அலுவலகங்கள், 23 மாவட்ட அலுவலகங்கள், மற்றும் 14 ஆய்வகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதம் உள்ள அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்களை கட்ட வாரியம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. எனவே **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில், கும்மிடிபூண்டி மற்றும் திருப்பூர் (தெற்கு) ஆகிய இரண்டு மாவட்ட அலுவலகங்களுக்கு வாரிய நிதியிலிருந்து ரூ.4 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

**12. வாரிய தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதியை ரூ.3.25 கோடி செலவில் ஏற்படுத்துதல்.**

இணைத்தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் வாரிய தலைமை அலுவலகத்தில் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டம் மற்றும் விவாதங்களில் கலந்து கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு முறையும் அழைக்கப்படுகிறார்கள். தலைமை அலுவலகத்திற்கு அடிக்கடி வருகை தருவதனால் அவர்களது வேலை நேரம் வீணாவதுடன், அவர்களுக்கான போக்குவரத்து செலவு, தங்கும் செலவு மற்றும் கூட்டம் நடத்துவதற்கான செலவும் வாரியத்திற்கு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம் கடந்த ஆண்டு தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதியினை ஏற்படுத்தி சிறப்பாக பயன்படுத்தி வருகின்றது. இவ்வசதியினை **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன்,**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மேலும் விரிவுபடுத்தி 2018–19ஆம் நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ.3.25 இலட்சம் செலவில் அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களிலும் காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

**13. நகர்ப்புற வனவியல் திட்டத்தின் கீழ் சென்னை புறநகர் பகுதியில் ரூ.175 இலட்சம் செலவில் மரக்கன்றுகள் வளர்த்தல் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் ரூ. 25 இலட்சம் செலவில் 25000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குதல்.**

தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் கொள்கை 2017–ல் வனங்களை சுற்றியுள்ள பகுதிகளில் பசுமை போர்வையினை ஏற்படுத்துதல், தனியார் நிலங்களில் மர வளர்ப்பினை ஊக்கப்படுத்துதல், படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்த்தல் மற்றும் இலவச மரக்கன்றுகளை பல்வேறு நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார்களுக்கும் அளித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர்ப்புற வனவியல் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரின் பசுமை போர்வையினை விரிவுபடுத்தும் வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 2018–19 ஆம் நிதி ஆண்டில் சென்னை புறநகர் பகுதியில் தனியார் நிறுவனங்கள், பள்ளி வளாகங்கள் மற்றும் தொழிற்சாலை வளாகங்களில் வாரிய நிதியிலிருந்து

ரூ. 175 இலட்சம் செலவில் சுமார் 5000 மரக்கன்றுகள் வனத்துறையின் மூலம் நடப்பட்டு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்யப்படும். மேலும் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் வகையில் 2018–19 ஆம் நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ. 25 இலட்சம் செலவில் 25000 மரக்கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்

## 14. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.15 இலட்சம் செலவில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் திட்டம்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 2016 முதல் தனது பணியாளர்களுக்கு புதிய சுகாதார காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இருப்பினும் இத்திட்டத்தில் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் வசதி இல்லை. எனவே **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பணியாளர்களின் உடல் நலனை காக்கும் பொருட்டு 45 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறையும், 45 வயதுக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தலா ஒரு நபருக்கு ரூ. 3,000 செலவில் முழு உடல் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2018–2019 நிதி ஆண்டு முதல் ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

**K.C. கருப்பணன்**

**சுற்றுச்சூழல் துறை அமைச்சர்**